www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

**நீலவண்ணன்**

### பகுதி: இரண்டு

## றைக்ளோப் வன் ஹூன்ஸ்

### 2

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஒல்லாந்தர் குடியேறினர். யுத்தத்தினால் சிதைந்த மாளிகைகள் தற்காலிகமாகத் திருத்தப்பட்டன. ஒல்லாந்தப் படையுடன் நார்டென் கப்பலில் வந்த பாதிரியார் பால் தேயஸ், போர்த்துக்கேயரின் கத்தோலிக்க தேவாலயத்தினைப் புரட்டஸ்தாந்துத் தேவாலயமாகச் சமயச் சுத்திகரிப்புச் செய்து முதலாவது நன்றிப் பிரார்த்தனையை நடாத்தினார்.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் தத்தம் ஆட்சிக் காலத்தில் நிர்வகித்தனர். அதனால், யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்ப்பாண மக்கள் 'இராசவாசல்' என்றே அழைத்தனர். போர்த்துக் கேயர் யாழ்ப்பாணப் பிரதேசத்தை 32 கோயிற்பற்றுக்களாகப் பிரித்தனர் ஒவ்வொரு கிறிஸ்தவ தேவாலயமுள்ள பகுதியும் ஒவ்வொரு கோயிற் பற்றாகக் கருதப்பட்டது. நல்லூர், சுண்டுக்குழி, வண்ணார்பண்ணை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், உடுப்பிட்டி, கட்டைவேலி, பருத்தித்துறை, நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, முள்ளிப்பற்று முதலான 32 கோயிற்பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த ஒவ்வொரு கோவிற்பற்றுக்கும் ஒவ்வொரு தமிழ்ப்பிரதிநிதி நிர்வாகத்திற்குத் துணை செய்பவராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த அந்தக் கோயிற்பற்றில் உயர்குலத்தாலும், செல்வாக்காலும் நாட்டாண்மையாக விளங்கிய ஒருவர் இப்பதவியை வகித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டையினுள் இருந்த அடுக்களையில் பெரும் அவியல் நடக்கும். ஒல்லாந்தர் மாட்டிறைச்சி உண்பவர்களாதலால். கோட்டைக்குள் மாடுகளை அறுக்கும் ஓரிடத்தையும் கொண்டிருந்தனர். பசுவதை யாழ்ப்பாண மக்களால் ஒதுக்கப்பட்ட ஆசாரமாதலால், மாட்டிறைச்சியைச் சைவர்கள் அன்று உண்பதில்லை. அதனால் இறைச்சிக்கு மாடுகளை விற்கமாட்டார்கள். எனவே, ஒல்லாந்தர் பாலிற்கென மாடுகளை வாங்கி, யாழ்ப்பாணக் கோட்டையில் அடைத்து, தேவையானபோது அவற்றினை வெட்டி உண்டனர். இந்த உண்மை வெளியில் தெரிந்ததும் ஒல்லாந்தருக்கு யாழ்ப்பாண மக்கள் மாடுகளை விற்க முன்வரவில்லை. அதனால் ஒரு வருடத்தில் ஒருவர் ஒரு மாடு வீதம் அவர்களுக்கு இறை செலுத்த வேண்டும் என ஒல்லாந்தக் கொமுசாறி கட்டளையிட்டான்.

அவனது கட்டளைக்குப் பணிந்து யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவரும் வருடத்திற்கு ஒரு மாடு வீதம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பிவைத்தனர். இதற்கு இணங்காத பலர் தண்டனைக்குப் பயந்து இந்தியாவிற்குச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகம் பார்த்த சண்முகநாத முதலியார் என்பவரிடம் ஒல்லாந்தக் கொமுசாறி ஒருநாள், விருந்தொன்றிற்கு நல்லதொரு காளைக்கன்று வேண்டும் எனக் கேட்டான். அதனால் சண்முகநாத முதலியார் தனது பதவியை உதறியெறிந்தார். திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் என்ற சைவர், ஒல்லாந்தருக்குப் பசுவொன்றினை வழங்கும் முறை வந்தபோது, அனைத்தையும் துறந்து இந்தியாவிற்கு ஓடிச் சென்று சிதம்பரத்தில் துறவு பூண்டார். சிதம்பரத்தில் ஞானப்பிரகாசர் குளம் என்ற திருக்குளத்தை அமைப்பித்தவர் இவரே. வரணி தில்லைநாதர் என்பவரும் ஒல்லாந்தருக்கு மாடு கொடுக்க மறுத்துச் சிதம்பரத்துக்கு ஓடிச் சென்றார். இவ்வாறு பல சைவர்கள் ஒல்லாந்தரின் கட்டளைக்குப் பணியாது இந்தியாவிற்கு விலகிச் சென்றிருக்கின்றனர்.

ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய நிர்வாகப் பிரிவுகளில் மிகப் பெரியதாக யாழ்ப்பாணக் கொமாண்டரி விளங்கியது. கொழும்பு, காலி ஆகிய ஏனைய இரு கொமாண்டரிகளும் பரப்பில் சிறிய ஆள்புலங்களாகவிருந்தன. கொழும்புப் பிரிவு மகாஓயாவிலிருந்து பேந்தோட்டை நதிவரை எட்டுக் கோறளைகளைக் கொண்டு விளங்கியது. யாழ்ப்பாணப் பிரிவு சிலாபத்தில் இருந்து தொடங்கி மன்னாரை உள்ளடக்கி வன்னிப் பிரதேசம், யாழ்ப்பாணக் குடாநாடு என்பவற்றைக் கொண்டதாக, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வரை பரந்தமைந்திருந்தது. இலங்கையின் வடபகுதி முழுவதையும் கொண்டதாகவும் கிழக்கு மாகாணம் முழுவதையும் கொண்டதாகவும் விளங்கியது. இவற்றின் நிர்வாக மையம் யாழ்ப்பாணக் கோட்டையாக இருந்தது. யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள (யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும்) காணிகள் மக்களுக்குரிதான பரவணிக் காணிகளாக இருந்தன; பரம்பரை பரம்பரையாக ஆண்டு அனுபவித்து வரும் காணிகள். ஆனால், வன்னிப் பிரதேசக் காணிகளில் பெரும் பகுதி அவ்வாறிருக்கவில்லை; அதனால் வன்னிக் காணிகளுக்கு ஒல்லாந்தக் கம்பனி உரிமை பாராட்டியது. ஒல்லாந்த ஆளுனரால் நியமிக்கப்பட்ட வன்னியர்கள் ஒல்லாந்தருக்குத் திறை செலுத்தி ஆண்டனர். வருடமொன்றுக்கு 30 யானைகள் திறை; அவற்றில் மூன்றில் இரண்டு ஆண் யானைகளாகவும் எஞ்சியவை பெண் யானைகளாகவும், ஒல்லாந்தருக்கு வன்னியரால் திறை செலுத்தப்பட்டன.



**யாழ்ப்பாணக் கோட்டையில் ஒல்லாந்தரைக் கவிழ்த்து கோட்டையைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை முறியடிக்கப்பட்டு சதிகாரர் தண்டனைக்குள்ளாகிறார்கள்.**

*(பால்தேயஸ் பாதிரியார் வரைபு – 1672)*

### 3

1662 ஆம் ஆண்டு, ஒல்லாந்தக் கொமுசாறி றைக்ளோப் வன்ஹூன்ஸ், இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வந்தான். ஒல்லாந்த ஆளுநராகக் கொழும்பில் இருந்து அட்றியான் வன் டோர்மேய்டன் என்பவனிடமிருந்து அதிகாரத்தைப் பொறுப்பேற்றான், அவ்வாறு இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வருவதற்கு முன்; யாழ்ப்பாணக் கோட்டையில் ஒரு சதி நடந்தது.

யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து ஒல்லாந்தரைத் துரத்திவிட்டு, யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்ற ஒரு பெரும் சதி நடந்துள்ளது. யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஒல்லாந்தப் படை வீரர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவிற்கு, நாகபட்டினத்திற்கு அனுப்பி வைக்க நேர்ந்தது. நாகபட்டினத்தில் ஒல்லாந்தருக்கெதிரான கிளர்ச்சியொன்றினை முறியடிப்பதற்காக ஒல்லாந்தப் படை அங்கு சென்றது. அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றச் சதித்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது.

இச் சதித்திட்டத்தில் டொன் லூயிஸ் என்பவன் முதன்மை வகித்தான். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, அங்கிருந்த போர்த்துக்கேயரில் சிலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருப்போம் எனச் சத்தியம் செய்து கொடுத்திருந்தனர். அவர்களில் ஐந்து பறங்கிகள் இச் சதியில் சம்பந்தப்பட்டிருந்தனர். மன்னாரைச் சேர்ந்த ஒரு கோயிற் பற்றுத் தலைவனும் இதில் சேர்ந்திருந்தான். இவர்களோடு கல்தேறா என்ற கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவரும் கூட்டுச் சேர்ந்திருந்தார். ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து சமயத்தை இங்கு பரப்புவதற்காக கத்தோலிக்க தேவாலயங்களைத் தம் பொறுப்பில் பறிமுதல் செய்தும், கத்தோலிக்கரை நெருக்குவாரப்படுத்தியும் வந்ததால், கத்தோலிக்கரான கல்தேறா மனவேதனை அடைந்திருந்தார். இன்னும் பலர் இச் சதியில் பங்கு கொண்டிருந்தனர்.

ஒல்லாந்தருக்கு எதிரான இந்தச் சதியில் நல்லூர் முதலியாராக இருந்த பூதத்தம்பி என்பவரும் பங்கு பற்றியிருந்தார் என அறியப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்தில் இராசவாசல் முதலியாராக விளங்கிய புவிநாயக முதலியின் மகனே இந்த பூதத்தம்பியாவார். புவிநாயக முதலியாருக்குப் பின்னர் இவர் நல்லூரின் முதலியாக நியமிக்கப்பட்டிருந்தாலும் இராசவாசல் முதலி என்ற பெரும் பட்டம் தந்தைக்குப் பின் இவருக்கு வழங்கப்படாமையால் இவர் சிறிது மனவருத்தமடைய நேரிட்டது. ஒல்லாந்த மதகுருவான பால்தேயஸ் பாதிரியார், புரட்டஸ்தாந்து மதத்தவனான சுண்டிக்குளி (சீதார்) முதலி அந்திராசிக்கு இராசவாசல் முதலிப் பட்டத்தை வழங்கக் காரணமாகவிருந்தார்.

நல்லூர் பூதத்தம்பி முதலியும் சுண்டிக்குளி அந்திராசி முதலியும் உத்தியோக ரீதியில் நண்பர்கள். ஒருநாள் அந்திராசிக்கு பூதத்தம்பியின் இல்லத்தில் ஒரு விருந்து நடந்தது. இராசவாசல் முதலியின் அன்பையும் ஆதரவையும் பெறுவதற்காகப் பூதத்தம்பி இந்த விருந்தை நடாத்தியிருக்கலாம். அந்த விருந்தில் உணவு பரிமாறிய பூதத்தம்பியின் மனைவி அழகவல்லியின் பேரழகில் அந்திராசி மயங்கி, தகாத ஆசை கொண்டான். பல பரிசில்களை அனுப்பி அவள் இணக்கத்தைக் கேட்டபோது, அவள் அவனைத் தூசித்து அனுப்ப நேர்ந்தது. அதனால் ஆத்திரமுற்ற அந்திராசி சந்தர்ப்பம் வாய்த்தபோது பூதத்தம்பியையும் ஒல்லாந்தருக்கு எதிரான சதியில் இணைத்து முடிச்சிட்டான் எனக் கருதப்படுகின்றது.

ஒல்லாந்தருக்கெதிரான சதியின் தலைவன் டொன்லூயிஸ் என்பவன் ஆவான். இந்த டொன்லூயிஸ், பூதத்தம்பிதான் எனவும் சிலர் கூறுகின்றனர்.

இச் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது. இச் சதித்திட்டத்தில் பங்குகொள்ளச் சம்மதித்திருந்த கண்டியைச் சேர்ந்த மனுவேல் ஆந்திரேடா என்ற சிங்கள முதலி ஒருவன் கடைசி நேரத்தில் அனைவரையும் காட்டிக் கொடுக்க நேர்ந்தது.

கொமாண்டர் வன் ஹூன்ஸ் நாகபட்டினத்திற்கும், வைஸ் கொமாண்டர் ஜாக்கோப் வன்றீய் தன் படைவீரர்களுடன் பருத்தித்துறைக்கும் சென்றிருந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை, கோட்டைக்குள்ளிருந்த ஒல்லாந்தர் தேவாலயத்தில் குரு பால் தேயஸ் பாதிரியாரால் நடாத்தப்படும் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாள் சதி நிறைவேற்றத் தக்க தருணமாகக் கருதப்பட்டது. தேவாலயத்திற்குள் புகுந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்போரைச் சடலங்களாக்குகின்ற முயற்சி தடுக்கப்பட்டது. அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு வழங்கிய தண்டனைகள் மிகமிகக் கொடூரமானவை.

சதித்திட்டதை உருவாக்க மூலகர்த்தாக்களாக விளங்கிய டொன்லூயிஸ், மன்னார் முதலி, போர்த்துக்கேயர் ஒருவர் ஆகிய மூவருக்கும் கொடூரமான தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் மூவரும் தண்டனை வழங்கப் பயன்படுத்தப்படும் சிலுவைச் சட்டத்தில் பிணைக்கப்பட்டனர். பின்னர் யாழ்ப்பாணக் கோட்டையில் தண்டனை வழங்கவென நியமிக்கப்பட்டிருந்த அலுகோசுகளினால் (காம்பிரிகள்) கோடரிகளினால் முதலில் தொண்டையிலும், பின்னர் மார்பிலும் வெட்டிப் பிளக்கப்பட்டு அவர்களின் இருதயங்கள் வெளியில் எடுக்கப்பட்டு அவர்களின் முகங்களில் வைக்கப்பட்டன. பூதத்தம்பியின் தலை துண்டிக்கப்பட்டது. ஏனையோர் பதினொருவர் தூக்கிலிடப்பட்டனர். அவர்களின் சடலங்கள் மரங்களில் தொங்கவிடப்பட்டு பறவைகளுக்கு இரையாக்கப்பட்டன.

ஒல்லாந்தரின் தண்டனைகள் மிகக் கொடூரமானவை, மட்டக்களப்பில் அவர்கள் கைது செய்தவர்களைக் கழுவேற்றிக் கொன்றிருக்கின்றனர். மரக்குற்றி ஒன்றில் பொருத்தப்பட்ட கூரான அலவாங்கு போன்று வேல் முனையில் பிருஷ்டத்திற்கூடாக தலை உச்சிவரை செலுத்திக் கொல்லப்படுகின்ற கொடூரம் கழுவேற்றலாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட உட்புறச் சதி முறியடிக்கப்பட்டது. அதன் பின்னர் ஆங்கிலேயர் இலங்கைக்கு வரும்வரை யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் விளங்கியது.

(தொடரும்)

படிப்பகம்